**30.08.2022**

**OS.No. 454/2019 PW : 1, திருமதி. சுசீலா**

**2, 3, 6 மற்றும் 7 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை...**

2ம் வாதி ஆனந்தன் என்னுடைய அண்ணன். 2ம் வாதியும், 1, 3 பிரதிவாதிகளும் என் உடன்பிறந்தவர்கள் தான். என் உடன்பிறந்த ரத்னா மற்றும் ராணி ஆகியோர் இறந்துவிட்டார்கள். 4ம் பிரதிவாதி ராணியின் வாரிசு. ரத்னாவின் வாரிசு 5ம் பிரதிவாதி. பாகம்கேட்டு இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளோம். என்னுடைய அப்பா இறக்கும்போது 2ம் பிரதிவாதிக்கு 13 வயது இருக்கும். என் தந்தை இறந்தபின்னர் 2ம் பிரதிவாதி தான் குடும்பத்தை பார்த்துக் கொண்டார். என் தந்தை இறக்கும்போது நாங்கள் சிறுகுழந்தைகள். என் தாயும், என் அண்ணனான 2ம் பிரதிவாதியும் தான் குடும்பத்தை பார்த்துக்கொண்டார்கள். என்னுடைய அப்பாவின் அக்காவான நாகம்மாளின் கணவர் குப்பா நாயுடு எங்கள் குடும்பத்தை பார்த்துக் கொண்டார். அவர்கள் தான் எங்களுக்கு திருமணத்தை செய்து வைத்தார்களா என்று கேட்டால் குப்பா நாயுடு தான் திருமணத்தை செய்து வைத்தார். எனக்கு சுமார் 27 வருடத்திற்கு முன்னர் திருமணம் ஆனது. 06.02.1993ல் குப்பா நாயுடு காலமானாரா என்று கேட்டால் எனக்கு திருமணமான புதிதில் காலமானார். தாவா சொத்தின் விஸ்தீரனம் எனக்கு தெரியாது. ஆனால் 7 இடத்திற்கு வழக்கை தாக்கல் செய்துள்ளோம். தாவா சொத்து ராமன்சேரி கிராமத்தில் இருக்கிறது. தாவா சொத்துக்களில் எத்தனை அயிட்டம் என் தந்தைக்கு பாத்தியப்பட்டது என்றும் எத்தனை ஆயிட்டம் குப்பா நாயுடுவிற்கு பாத்தியப்பட்டது என்றும் எனக்கு தெரியாது. வழக்கை தாக்கல் செய்ய என்

கணவர் தான் ஆவணங்களை வாங்கி வந்தார். 1 முதல் 4 அயிட்ட சொத்துக்கள் குப்பா நாயுடுவிற்கு பாத்தியப்பட்டது என்றால் சரிதான். 5 முதல் 7 அயிட்ட சொத்துக்களுக்கு என் தந்தை பெயரில் பட்டா இருக்கிறது. குப்பா நாயுடு மற்றும் அவரது மனைவி நாகம்மாள் வாரிசுகள் இன்றி காலமாகிவிட்டார்கள். பிராதின் 1 முதல் 4 அயிட்ட சொத்துக்களை பொறுத்து குப்பா நாயுடு 09.08.1979 தேதியிட்ட ஒரு பதிவுசெய்யப்பட்ட உயில் ஆவணத்தை 2ம் பிரதிவாதிக்கு எழுதி கொடுத்திருக்கிறார் என்று சொன்னால் சரியல்ல. அது 2ம் பிரதிவாதியால் எழுதி கொள்ளப்பட்ட உயில் ஆகும். அவ்விதம் உயில் எழுதப்பட்ட விவரம் எனக்கு தெரியாது. அது அவரே எழுதிக்கொண்ட உயில் என்று எப்படி தெரியும் என்று கேட்டால் நான் ஊருக்கு சென்றபோது அந்த உயில்பற்றி சொன்னார்கள். 1 முதல் 4 அயிட்ட சொத்துக்களுக்கு பட்டா 2ம் பிரதிவாதி பெயரில் இருக்கிறதா என்று எனக்கு தெரியாது. 2ம் பிரதிவாதி பெயரில் உயில் மற்றும் பட்டா இருக்கிறது என்று எதிர்வழக்குரையில் சொன்ன விவரத்தை என் வழக்கறிஞர் என்னிடம் சொன்னார். சாட்சி தற்போது சொல்லவில்லை என்று சாட்சியளிக்கிறார். என் அண்ணனிடம் 4 வருடத்திற்கு முன்பு பாகம் கேட்டேன். நாங்கள் வில்லங்கம்போட்டு பார்த்தோம். அதில் 1 முதல் 4 அயிட்ட சொத்துக்களை காட்டி 1ம் பிரதிவாதி வங்கியில் கடன் வாங்கியதாக வரவில்லை. 8 முதல் 10 பிரதிவாதிகள் புதூர் கிராமத்தை சேர்ந்தவர்கள். அவர்கள் எங்கள் ஊரைச் சேர்ந்தவர்கள் தான். என் உறவினர்கள் தான். 8 முதல் 10 பிரதிவாதிகள் என்

தந்தை பெயரில் உள்ள சொத்துக்களை 2ம் பிரதிவாதியிடமிருந்து கிரையம் வாங்கியுள்ளார்கள். அவர்கள் கிரையம் வாங்கிய விவரம் எனக்கு 4 வருடம் முன்பு தெரியும். 8 முதல் 10 பிரதிவாதிகள் சொத்தை கிரையம் வாங்கிய போதே எனக்கு தெரியும் என்றும் தற்போது வழக்கிற்காக பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. குப்பா நாயுடு 2ம் பிரதிவாதிக்கு உயில் எழுதி வைத்த விவரம் உயில் எழுதியபோதே எனக்கு தெரியும் என்று சொன்னால் சரியல்ல. 1 முதல் 4 அயிட்ட சொத்துக்கள் எங்கள் குடும்ப சொத்துக்கள் இல்லைஎன்றும் அது 2ம் பிரதிவாதிக்கு பாத்தியப்பட்டது என்றும் அதில் நாங்கள் பாகம் கேட்கமுடியாது என்றால் சரியல்ல. பிராதின் 6ம் அயிட்ட சொத்து 8ம் பிரதிவாதிக்கு 2003ம் வருடமே விற்கப்பட்டுவிட்டது என்றும் அதிலும் நாங்கள் பாகம் கேட்கமுடியாது என்றால் சரியல்ல. 7வது அயிட்ட சொத்து 2007ம் வருடமே 10ம் பிரதிவாதிக்கு விற்கப்பட்டுவிட்டது என்றும் அந்த விவரம் அப்போதே எனக்கு தெரியும் என்றும் அதிலும் நான் பாகம்கேட்க முடியாது என்றால் சரியல்ல. அந்த ஆவணத்தை செல்லாது என்று பரிகாரம் கேட்க எங்களுக்கு உரிமை இல்லை என்றால் சரியல்ல. 5முதல் 7 அயிட்ட சொத்துக்கள் பூர்வீக சொத்துக்கள் இல்லை என்றால் சரிதான். அது என் தந்தையின் சொத்துக்கள் என்றால் சரிதான். அந்த சொத்துக்களுக்கு என் தந்தை பெயரில் கிரைய ஆவணம் இருக்கிறதா என்று எனக்கு தெரியாது. 5 முதல் 7 அயிட்ட சொத்துக்கள் பூர்வீக சொத்துக்கள் என்றும் எங்களுக்கு 1989ம் வருடத்திற்கு

முன்னரே திருமணம் ஆகிவிட்டதால் அந்த சொத்துக்களில் எங்களுக்கு எந்த பாகமும் கிடைக்காது என்றால் சரியல்ல. நாங்கள் பாகம் கேட்டதற்கு முன்னர் எங்களுக்கும், 2ம் பிரதிவாதிக்கும் எந்த பிரச்சனையும் இல்லை. குப்பா நாயுடு இறந்தபின்னர் 2ம் பிரதிவாதி எங்களுக்கு எதுவும் செய்யவில்லை. வழக்கை தாக்கல் செய்யும் முன்புவரை 2ம் பிரதிவாதி எங்களுக்கு வேண்டிய சீர்வரிசைகளை செய்தார் என்றால் சரியல்ல. தாவா சொத்துக்கள் எதிலும் எங்களுக்கு பாகம் கிடைக்ககூடியதில்லை என்றால் சரியல்ல. பிராது தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல.

Sd/- S. Ganapathisamy,
I Additional District and Sessions Judge,
Tiruvallur.